கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

**அசல் வழக்கு எண் 26/2025**

வாதி தரப்பு சாட்சி –1 மூக்கன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 24.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தை உட்பிரிவு செய்தததில் தான் தற்போது பிரச்சனை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது கடந்த 07.07.2015 ல் பாக முச்சலிக்கா ஊர்க்காரர்கள் முன்னிலையில் எழுதி கொண்டதற்கான ஆவணம் என்றால் சரிதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆனால் அதன்படி பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. நானும், எனது மகன், எனது மனைவி மூவரும் ஊர்க்காரர்கள் முன்னிலையில் மேற்படி பாக முச்சலிக்கா எழுதியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாக முச்சலிக்காவின் படி தெற்கே எனக்கும், வடக்கே பிரதிவாதியான எனது அண்ணனுக்கும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

2. கடந்த 2006 ல் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் பிரதிவாதியின் பங்கில் அவரது மனைவியான தங்கமணி பெயரில் வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் எனக்கும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் எனது பங்கில் வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டு நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடானது எனது மருமகளின் பெயரில் உள்ளது. மேற்படி வீடானது வாதி, பிரதிவாதி மற்றும் மற்றொரு சகோதரர் ஆகியோர் பெயரில் கூட்டுபட்டாவின் கீழ் உள்ள நிலத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். புதிய சர்வே எண்.942/14 ல் மூக்கன், சந்தனம், காளிப்பன் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி புல எண்ணில் பிரதிவாதி மற்றும் எனது மருமகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும மேற்படி இடத்தில் பிரதிவாதியின் வீடு மட்டுமே உள்ளது என்று கூறுகிறார். மேற்படி எனது மகனுக்கு கட்டிக்கொடுத்த வீடு எந்த புல எண்ணில் உள்ளது என்றால் அது வேறு புல எண்ணில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியாது. மேற்படி புல எண்ணிற்கு எனது மருமகள் பெயரில் பட்டா உள்ளது. எனக்கு பிரிந்த பாகத்தில் தான் எனது மகனுக்கு வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம்

பிரதிவாதி சந்தனம் என்பவர் உட்பிரிவு செய்து தனிப்பட்ட கோரி மனு கொடுத்தாரா என்றால் கொடுத்தார்.

4. மேற்படி மனுவின் அடிப்படையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணைக்கு வரச்சொல்லி அழைப்பாணை வந்ததா என்றால் அது பற்றி தெரியாது. 16.05.2022 ல் எனக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து விசாரணைக்கு வர அழைப்பு வந்ததா என்றால் இல்லை. கூட்டு பட்டாவில் உள்ள எனது காளிப்பன் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி காளிப்பன் திருமணமாகமல் இறந்துவிட்டதால் நானும், பிரதிவாதி மட்டுமே வாரிசு என்றால் சரிதான். எனது காளியப்பன் இறந்துவிட்டதால் மேற்படி சொத்தில் ஒரு பாகம் எனக்கும் மற்றொரு பாகம் பிரதிவாதிக்கும் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி பாக முச்சலிக்கா எழுதப்பட்டதற்கு முன்பு கடந்த 02.07.2015 அன்று நானும், பிரதிவாதியும் ஒப்பந்த முச்சலிக்கா எழுதிகொண்டோம் என்றால் சரிதான்.

5. மேற்படி ஒப்பந்த முச்சலிக்காவில் பொதுவான மரத்தை சமமாக பிரித்து விற்பனை செய்து அதை சமமாக நானும், பிரதிவாதியும் தலா ரூ.2750/–வீதம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எனது வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தை தவிர எனக்கு பூர்வீக இடம் வேறு உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை தவிர நானோ, எனது மகனோ கிரையம் பெற்ற சொத்துக்கள் வேறு உள்ளதா என்றால் இல்லை. ஊர் வழக்கப்படி நாங்கள் பாகம் பிரித்து வீடு கட்டி தனித்தனி அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

6. எனக்கும் பிரதிவாதிக்கும் குற்றவியல் நீதிமன்றத்தில் மேற்படி பிரச்சனை சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பாகம் பிரிந்த சொத்துக்களை நாங்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றும், அதில் பிரதிவாதிக்கு பிரிந்த பாகத்தை பொறுத்து அவர் உட்பிரிவு செய்து கொள்வதை தடை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவருக்கு பிரிந்த பாகத்தை பொறுத்து உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெறுவதை தடை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன்.

7. மேற்படி அறிவிப்பு அனுப்பியிருந்தால் நான் அதன் நகலை இவ்வழக்கில் தாக்கல செய்திருப்பேன் என்றும், அவ்வாறு அறிவிப்பு கொடுக்காததால் அதன்

நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2021ல் நில அபகரிப்பு செய்ததாக கொடுத்த புகாரின் இரசீது தான் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் எந்த பிரச்சனை சம்மந்தமாக நான் மனு கொடுத்தாக குறிப்பு இல்லை என்றும், மேற்படி மனுவையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மனுவை தாக்கல் செய்தால் உண்மை விவரங்கள் தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. தாவா சொத்தை பாகம் பிரிந்து முறையாக அனுபவம் செய்து வரும் நிலையில் அதை மறைத்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**